# நிமிஷ நாடகம்

நடைபெறுமிடம் : ஆஸ்திரேலியா, ஓர் வீடு.

சுந்தர் : எனது நாலாம் பாட்டனார் இந்தியாவில், மதுரையில் பிறந்தவர். இந்தியா அடிமையுற்றுக் கிடப்பது நேற்றுத்தான் தெரிந்தது. மதுரை மாத்திரம் சுதந்தரம் இழந்திராது. 63 திருவிளையாடல் செய்த மதுரைச் சோமசுந்தரக் கடவுள் இந்தியாவைக் காப்பாற்றலாகாதா என்று ஓர் கடிதம் இந்திய நண்பர் ஒருவருக்கு எழுதியுள்ளேன்.

டிக்! டிக்! டிக்!

சுந்தர் : யார் கதவைத் தட்டுறது? (திறந்து பார்த்து) தபாலா (வாங்கிப் படித்து) என்ன ஆச்சரியம்! சோமசுந்தரக் கடவுளுமா அடிமை! ஆ!!

- K.S.

- *புதுவை முரசு*, **29.12.1930**

■ ■ ■